(*b*) whether irrigation facilities are available from any reservoirs for these lands ?

நெற் பயிர்

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : மாண்புமிகு உணவு-வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் வருடத்திற்கு ஒரு முறை பயிர் செய்யும் நெற் பயிர் நிலங்களின் பரப்பளவு தாலூகா வாரியாக எவ்வளவு?

(இ) இத்தகைய நிலங்களுக்கு நீர்த்தேக்கத் தண்ணீர் பாயும் வசதி யுண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தோவாளை வட்டத்தில் 746·79 ஏக்கர் பரப்பில் ஒருபோக நெல் பயிரிடப்படுகிறது. கன்னியா குமரி மாவட்டத்தில் அகஸ்தீஸ்வரம், கல்குளம், விளவங்கோடு ஆகிய வட்டங்களில் (ஒரு போக) நெல் பயிரிடப்படுவதில்லை.

(இ) இல்லை.

Bifurcation of districts and taluks

*** 194.** *Q.*—THIRU N. R. THIAGARAJAN : **Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state the districts and taluks that are proposed to be bifurcated into two parts ?**

மாவட்டங்களும் தாலூக்காக்களும் இரண்டாகப் பிரித்தல்.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்கவேண்டுகிறேன் :

எந்தெந்த மாவட்டங்களும், தாலூகாக்களும் இரண்டாகப் பிரிக்கப் பட இருக்கின்றன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் எந்த மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்கும் செயற் குறிப்பு எதுவும் இல்லை. ஸ்ரீவைகுண்டம் வட்டத்திலுள்ள தூத்துக்குடி துணை வட்டத்தை தூத்துக்குடியில் தலைமை யிடத்துடன் ஒரு முக்கிய வட்டமாக மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நாமக்கல் வட்டத்தை நாமக்கல், வேலூர் என்ற இருவட்டங்களாகப் பிரிக்கும் செயற்குறிப்பு ஒன்றினை சேலம் கலெக்டர் பணிந்தனுப்பி யுள்ளார். அவருடைய செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

திரு. என். ஆர். தியாகராஜன் : ஏற்கெனவேயே பிரிக்கப்பட்ட பெரிய குளம் தாலூகாவில் 7 பஞ்சாயத்து யூனியன்கள் இருக்கின்றன. அந்த ஏழு பஞ்சாயத்து யூனியன்களில் மூன்று பஞ்சாயத்து யூனியன்கள் பெரியகுளம் தாலூகாவிலும், நான்கு பஞ்சாயத்து யூனியன்கள் மற்ற தாலூகாவிலும் ஆக பிரிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே பெரிய குளத்தில் சப்-தாலூகா இருந்தது. அதைச் சுற்றித்தான் தேனி மந்தைக்குப் போகிறவர்களும், உத்தமபாளையத்திற்கு போக வேண்டியவர் களும் போகவேண்டும். ஆகவே இதைத் திருத்தி அமைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இவைகளை எல்லாம் கலந்து தான் உத்தம பாளையம் தனித் தாலூகாவாக அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். எத்திராஜுலு : தென்னாற்காடு ஜில்லாவை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று சர்க்காருக்கு ஏதாவது மனு வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : புதிதாக இப்போதுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கிளப்பியிருக்கிற கோரிக்கையாகும்.

திரு. சி. வி. ராஜகோபால் : கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய இரண்டும் ஒன்றுகயிருந்து இரண்டு மாவட்டங்களாக பிரித்த பிறகு ஏராளமான நஷ்டம் வருவதாகச் சொல்லப்படுகிறது. அதில் கிடைக்கவேண்டிய ரெவின்யூ கிடைக்காமல் நஷ்டம் வருவதாகச் சொல்கிருர்கள். அது உண்மைதாஞ ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கிருஷ்ணகிரி, தர்மபுரி ஆகிய இரண்டும் ஒரே மாவட்டம்தான். பேர் வைப்பதில் தான் தகராறு ஏற்பட்டது. சேலம் மாவட்டத்தில் இருப்பதால், பிற்போக்கான இந்தப் பகுதிகளுக்கு நல்ல கவனம் செலுத்தமுடியவில்லை என்று மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையின் அடிப்படையில், இந்த மாவட்டம் இருந்தது அந்தப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் வருவாய் என்று சொன்னுல் புன்செய் நில வரியிருந்தது. அதை ரத்து செய்துவிட்ட காரணத்தால் வருவாய் இல்லாவிட்டாலும், தனி மாவட்டமாகிய பிறகு அபிவிருத்தி வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றன.

திரு. எஸ். ராஜமார்த்தாண்டம்: புதுக்கோட்டையைத் தனி ஜில்லா வாக பிரிக்க கோரிக்கை வந்ததும், அது பரிசீலனையில் இருப்பதாகவும் பார்த்தேன். அது எந்த அளவில் இருக்கிறது என்று அறிய விரும்பு கிறேன் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : பத்திரிகை அளவிலே வருகிற தகவல்கள் எல்லாம் அரசாங்கத்திற்கு வருவதில்லை.

திரு. டி. வி. தேவராஜ முதலியார் : சேலம் மாவட்டம் பிரிக்கும்போது வட ஆர்க்காடு மாவட்டமும் இரண்டாக பிரிக்கப்படப் போவதாகச் சொன்னுர் கள். ஏற்கெனவே சொன்ன அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அப்படிப்பட்ட தகவல்கள் அரசாங்கத்திடம் இல்லை. வெளியிலே அப்படிப்பட்ட தகவல்கள் உலாவலாம்.

Sugar

* 195—*Q*.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state :

(*a*) the average quantity of sugar produced in Tamilnad per annum ;

(*b*) whether the Union Government have ordered that the Mills can sell 40 per cent of the production in the open market :

(*c*) the quantiy of sugar that can be obtained out of 40 per cent by the State Government from the Co-operative sugar Mills ; and

(*d*) how the Government will distribute it ?

சர்க்கரை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வருவாய் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்கவேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் சராசரி ஒரு வருடத்தில் உற்பத்தியாகும் சர்க்கரை அளவு எவ்வளவு ?

(இ) 40 சதம் மில்கள் இஷ்டம்போல் விற்கலாம் என மத்திய அரசு உத்தரவிட்டதா ?

(உ) கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மூலம் 40 சதவிகிதத்தில் தமிழக அரசுக்கு எவ்வளவு கிடைக்கும் ?

(எ) இதை எப்படி வினியோகிக்க சர்க்கார் உத்தேசித்துள்ளது ?